செ.வெ.எண்:63 நாள்:20.07.2022

**சிவகங்கை மாவட்டம்**

**சிவகங்கை மாவட்ட சமூகநல அலுவலகத்தில் காலியாக உள்ள தற்காலிக இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணிக்கு தகுதியுடைய நபர்கள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ப.மதுசூதன் ரெட்டி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

சிவகங்கை மாவட்ட சமூகநல அலுவகத்தில் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005-ன் கீழ் பணிபுரிய இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணியிடங்கள் நேர்முகத் தேர்வு மூலம் நிரப்பப்படவுள்ளது. இப்பணியிடங்களுக்கு தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

பணியிடங்களுக்கு பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று, தமிழ் மற்றும் ஆங்கில தட்டச்சில் (முதுநிலை) தேர்ச்சி பெற்ற, கணினி பயன்பாட்டில் தகுதியுடைய நபர்கள் விண்ணப்பிக்கலாம், தொகுப்பு ஊதியமாக மாதம் ரூ.12,000/- விகிதத்தில் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்படவுள்ளனர். விண்ணப்பிக்க விரும்புவர்கள் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட சமூகநல அலுவலகத்தில் 29.07.2022 மாலை 5.00 மணிக்குள் விண்ணப்பத்தினை சமர்ப்பிக்க வேண்டும் என சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ப.மதுசூதன் ரெட்டி,இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், சிவகங்கை.**

**@SivagangaiCollectorate Sivagangai_collectorate @SivagangaiDist**